கள். நாம் அங்கே எடுத்து வைக்கிற கருத்து, மாநில உரிமைகள் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கவேண்டும் என்ற அந்தக் கருத்தாகத்தான் அமையும் என்பதை நான் நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

(உ) பேரவைத் தலைவரின் தீர்ப்பை விமர்சிக்கும் வகையில் மதுராந்தகம் நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது பிரச்சினை பற்றி உரிமைக் குழுவிற்கு அனுப்பியுள்ளது குறித்து.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய அதிகாரத்திலே குறுக்கிட்டதாக என்னைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். உங்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அதிலே நான் உள்ளே நுழைய விரும்பவில்லை. ஆனால் இங்கே, உகம்சந்த் அவர்களுடைய சகோதரர் சேர்மனாக இருக்கிற அந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதை அனுப்புவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு). அதிலே கான்ட்ரோவர்சி இருக்கிறது. (குறுக்கீடு). அதை அனுப்புவதும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொடரே தவறு. மதுராந்தகம் நகராட்சி. அதிலே யாருடைய சகோதரர் என்பது அல்ல பேச்சு.

திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மதுராந்தகம் நகரமன்றத்தினுடைய தீர்மானத்தின் மீது உரிமைக் குழுவிற்கு அனுப்புவதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அது உரிமைக் குழுவிற்குப் போவதும், போகாததும் உங்களுடைய முடிவு. ஆனால் நான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குச் சொல்லிக் கொள்வது எல்லாம், மதுராந்தகம் நகராட்சியிலே அரசாங்கத்திற்கு போட்டோக்களை வெளியிடுங்கள் என்று ஒரு ரெக்கொஸ்ட், அதாவது வேண்டுகோளாகத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, வற்புறுத்தவோ அல்லது நீங்கள் செய்யவில்லை என்றால், போராட்டம் நடத்துவோம் என்று சொல்லியோ, எந்தவிதமான இதுவும் இல்லை. அப்படி?

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1989 மே 4

பேசவேண்டும் என்று நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால், வீரமணி, எல்லாவற்றையும் இழுக்கவேண்டியதாக இருக்கும். அப்படிப்பட்ட பிரச்சினைத் தேவையா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முடிவு செய்ய வேண்டியது உரிமைக் குழு, அதிலே தங்கள் கட்சியினரும் உறுப்பினர்ககாக இருக்கிறார்கள். அதை அங்கே தெரிவித்து ஒரு முடிவு எடுக்கவேண்டுகிறேன்.

(ஊ) வினா நேரம் முடிவுற்றவுடன் முக்கியப் பிரச்சினைகள் குறித்து எழுப்ப விரும்பும் உறுப்பினர்கள் பேரவைத் தலைவரிடம் முன் இசைவு பெற வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுவாகவே இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் டெல்லி மாநாட்டில் கலந்து கொள்வது பற்றி பிரதமர் அவர்கள் கூட்டிய கருத்தரங்கிலே கலந்துகொள்வது பற்றி ஒரு விளக்கம் அளித்தார்கள். இது அவையில் கேட்கப்பட்டு, அதற்கு பதில் சொல்லப்பட வேண்டியது, தேவை என்பதில் எனக்கு இரண்டாவது கருத்து கிடையாது. ஆனால் இப்படி முன்கூட்டியே தெரிவித்து பதில் சொல்லக்கூடிய வாய்ப்புள்ள அமைச்சர்கள் அதுபற்றி தெரிந்து கொண்டு பதில் சொல்வதற்கான தயார் நிலையை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் முன் இசைவு என்பது தரப்படுகிறதே தவிர, மற்றபடி அதில் மரபுகள் மீறல் என்பது வேறு நாங்கள் திடீரென்று எழுந்து கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது என்று உறுப்பினர்கள் கருதுவார் ளானால், அவர்களுக்கு நான் அளிக்க வேண்டிய பதில் இதுதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்களே, திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய இந்த வினாவிற்கு முதலிலே ஒரு பகுதியில் விடையைச் சொல்லியிருக்கிறார்கள். இது முன் பகுதி. இதை இன்றைக்கு உடனடியாக எழுப்பித்தான் தீரவேண்டும் என்று இல்லை. இதை 8-30 மணிக்குக் கேட்டிருந்தால் கூட அதைப்பற்றிச்சொல்ல முடியும் என்று